வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 | 01.07.2026 புதன்கிழமை | இதழ் : 176 | பக்கங்கள் : 08




## அஸ்வெசும பட்டியலில் இருந்து 4 இலட்சம் குடும்பங்கள் நீக்கம்!

கொழும்பு, ஜூலை. 01

அஸ்வெசும நலன்புரிப் பயனாளிப் பட்டியலில் இருந்த சுமார் 4 இலட்சத்து 25 ஆயிரம் குடும்பங்கள் நேற்று முதல் அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்படுவதாக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து தற்காலிகமாக வறுமை நிலைக்குத் தள்ளப்பட்ட குடும்பங்களே இவ்வாறு பட்டியலில் இருந்து நீக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இப்பிரிவினர் "விளிம்புநிலை குழுவினர்" என வகைப்படுத்தப்பட்டிருந்தனர்.

கடந்த டிசெம்பர் மாதமே இக்குடும்பங்களை அஸ்வெசும பட்டியலில் இருந்து நீக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், "டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு மேலும் ஆறு மாத காலம் பட்டியலில் நீடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இக்குடும்பங்களுக்கு மாதாந்தம் சுமார் 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத் தக்கது. அஸ்வெசும பட்டியலில்

07

# சர்வதேச நாணய நிதியக் குழு இலங்கை அரசுக்குப் பாராட்டு!

### ஜனாதிபதி, பிரதமருடன் முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஜூலை. 01

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சொனாலி ஜெயின்-சந்திரா தலைமையிலான தூதுக்குழுவினர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்தனர்.

இதன்போது, பொருளாதார மீட்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றம் மற்றும் இலங்கையின் மீளெழுச்சித் திறன் ஆகியவற்றை நாணய நிதியத் தூதுக்குழுவினர் பாராட்டினர்.

ஜூன் 24 முதல் 30 வரை நாணய நிதியத்தின் தூதுக்குழுவினர் கொழும்பிற்கு மேற்கொண்ட விஜயத்தின்

07



# கொடூர படுகொலைகளை செய்துவிட்டு குற்றமற்றவர் எனக் கூறுவது வேடிக்கை!

### பிள்ளையான் குறித்து அமைச்சர் விஜேபால



கொழும்பு, ஜூலை. 01

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) என்பவர் கொடூரமான கொலைகளையும், பல்வேறு குற்றச் செயல்களையும் புரிந்தவர் என்றும், அவருக்கான தக்க தண்டனையை நீதிமன்றம் நிச்சயம் வழங்கும் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பிள்ளையான் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று

07

## நாட்டு மக்களை நாளுக்கு நாள் மன உழைச்சலில் தள்ளும் அரசு!

### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை. 01

தற்போதைய அரசாங்கம் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, நாளுக்கு நாள் மக்களை வறுமையிலும் மன உளைச்சலிலும் தள்ளி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல்

07

## ரூ. 20 விலை குறைப்பால் மக்களுக்கு என்ன பயன்?"

### எரிபொருள் விலை குறைப்பு குறித்து எதிரணி விமர்சனம்

கொழும்பு, ஜூலை. 01

நாட்டில் அண்மையில் அறிவிக்கப்பட்ட டீசல் மற்றும் பெட்ரோல் விலை குறைப்பானது பொதுமக்களுக்கு எந்தவிதமான உண்மையான நிவாரணத்தையும் வழங்காது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற

07

## ஹெய்ட்டிக்கு இலங்கை படைகள் அனுப்பும் முடிவு: தண்டனையில் இருந்து தப்பும் நிலையாகக்கூடாது!

### சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம்

கொழும்பு, ஜூலை 01

ஹெய்ட்டியில் அமைதிப் பணிகளுக்காக இலங்கைப் படையினரை அனுப்பும் தீர்மானம், ஏற்கனவே இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறலை புறக்கணிக்கும் வகையில் அமையக்கூடாது என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் வலியுறுத்தியுள்ளது.

ஹெய்ட்டிக்கு இலங்கைப் படையினரை மீண்டும் அனுப்பும் நடவடிக்கை தொடர்பில் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் ஏற்கனவே கவலை வெளியிட்டுள்ள நிலையில், இந்த

07

## கடற்படை தளபதியாக டேமியன் பெர்னான்டோ!



கொழும்பு, ஜூலை. 01

இலங்கை கடற்படையின் புதிய கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் டேமியன் பெர்னாண்டோ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்குரிய நியமனக் கடிதம், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

07

## இவ்வருடம் மாகாணத் தேர்தல் நடப்பதற்கு வாய்ப்பே இல்லை!

### கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூலை. 04


மாகாண சபைத் தேர்தல் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதி மீண்டும் கூடவுள்ள நிலையில், தேர்தலை நடத்துவதில் நிலவும் முட்டுக்கட்டைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர்

07

## இலங்கையிலேயே மிகச்சிறப்பாக செயற்படும் வடமாகாண சிறுவர் நன்னடத்தை அலுவலர்கள்!

### அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் பாராட்டு



யாழ்ப்பாணம், ஜூலை. 01

இலங்கையிலேயே வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மிகவும் சிறப்பாகச் செயற்படுகின்றார்கள். ஏனைய மாகாணங்களில் நடைபெறும் கலந்துரையாடல்களின் போது, இவர் களது சேவையையே நாம் முன்னு தாரணமாகச்

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்குரோத்து அரசியல்வாதிகளே “அரிசி” கதைகளை கூறுகின்றனர்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ விமர்சனம்



கொழும்பு, ஜூலை. 01

“அரச ஊழியர்களுக்குக் கடன் தவணை அடிப்படையில் 20 கிலோ அரிசி வழங்குவது தொடர்பில் அரசாங்கம் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை” என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

வங்குரோத்தடைந்துள்ள எதிரணியினருக்கு அரசியல் நடத்துவதற்கு வேறு எதுவும் இல்லாததாலேயே இவ்வாறு கூறுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

“அரச ஊழியர்களுக்குக் கார் வழங்குவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், தற்போது கடனுக்கு அரிசி வழங்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளனர். அந்த அளவுக்கு அரச ஊழியர்கள் தள்ளப்பட்டுள்ளனர்” என எதிரணி உறுப்பினர்கள் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

“அரச ஊழியர்கள் சிலரே இது பற்றிய யோசனையை முன்வைத்திருந்தனர் என அமைச்சர் வசந்த சமரசிங்க விளக்கமளித்திருந்தார். அரசாங்கம் என்ற வகையில் நாம் அவ்வாறு எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை.

வங்குரோத்தடைந்துள்ள எதிரணியினருக்கு அரசியல் நடத்துவதற்கு வேறு எதுவும் இல்லாததாலேயே, இவ்வாறான போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன” என்றார். (அ)

# டீசல் விலை குறைப்பு குறித்து பஸ் உரிமையாளர்கள் விசனம்

கொழும்பு, ஜூலை. 01

வருடாந்த பேருந்து கட்டண திருத்தம் இன்று முதல் அமுலுக்கு வரவுள்ள நிலையில், நேற்று முன் தினம் டீசல் விலை குறைக்கப்பட்டமை அரசாங்கத்தின் தவறான நடவடிக்கை என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

திட்டமிட்டிருந்த 20 வீத கட்டண உயர்வு தற்போது 15 முதல் 17 வீதமாக குறைக்கப்பட்டுள்ளதாக பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பஸ் கட்டண திருத்தம் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் கலந்துரையாட வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும், இதனால் தமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தேசிய கொள்கைக்கு ஏற்ப போதுமான கட்டண உயர்வு வழங்கப்படாவிட்டால் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

டீசல் விலை நிர்ணயம் மற்றும் கட்டண திருத்தம் தொடர்பாக அரசாங்கம் வெளிப்படையாக நடக்கவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (அ)

# மூளாய் 4ஆம் வீதிக்கு அடிக்கல்!



யாழ்ப்பாணம், ஜூலை. 01

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட மூளாய் 4ஆம் வீதியின் புனரமைப்பு பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

குறித்த வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருந்த நிலையில் பிரதேச சபையினரால் இந்த புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதன்போது குறித்த வீதிக்கு அண்மையில் அமைந்துள்ள ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் வீதிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜெயந்தன், உறுப்பினர் விஜி மருகன், கிராம மட்ட அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ-05)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை. 01

காங்கேசன்துறை முதல் மன்னார், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையிலான கடற்பகுதிகளுக்கு வானிலை ஆய்வுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, காங்கேசன்துறை முதல் மன்னார், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையிலான கடலோரப் பகுதிகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 50-60 கி.மீ. வரை அதிகரிக்கும் என்றும், கடற்பகுதிகள் அவ்வப்போது கொந்தளிப்பாக மாறக் கூடும் என்றும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை வழியாக சிலாபம் முதல் பொத்துவில் வரையிலான கடலோரப் பகுதிகளில் கடல் மட்டம் சுமார் 2.0-3.0 மீற்றர் வரை உயர வாய்ப்புள்ளது.

எனவே, மீன்பிடி மற்றும் கடற்படை சமூகத்தினர் இது தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறும், இது குறித்து வானிலை அவதான நிலையத்தால் வெளியிடப்படும் எதிர்கால ஆலோசனைகளுக்கு எச்சரிக்கையாக இருக்குமாறும் வானிலை அவதான நிலையம் கேட்டுள்ளது. (அ)

# இலங்கை நிர்வாக சேவைக்கு 150 புதிய அதிகாரிகள் விரைவில்

கொழும்பு, ஜூலை. 01

இலங்கை நிர்வாக சேவைக்கு 150 புதிய அதிகாரிகளை உடனடியாக இணைத்துக் கொள்வதற்குக் பொது நிர்வாக அமைச்சு உத்தியோகபூர்வமாகத் தீர்மானித்துள்ளது.

இது குறித்த போட்டிப் பரீட்சைகள் மிகத் துரிதமான முறையில் நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளதாகப் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் சந்தன அபேரத்ன உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இப்பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெறும் உத்தியோகபூர்வப் புள்ளிகளின் அடிப்படையிலேயே இந்த புதிய நியமனங்கள் அனைத்தும் முழுமையாக வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு புதிதாகத் தெரிவு செய்யப்படவுள்ள 150 இளம் அதிகாரிகளும், நாடளாவிய ரீதியிலுள்ள பல்வேறு அரச திணைக்களங்கள் மற்றும் முதன்மை அமைச்சுகளின் உதவிச் செயலாளர் பதவிகளில் அமர்த்தப்படவுள்ளனர்.

தற்போதைய தரவு நிலவரங்களின்படி, இலங்கை நிர்வாகச் சேவைக்குள் நீண்ட காலமாகப் பெருமளவிலான உத்தியோக பூர்வப் பதவி வெற்றிடங்கள் நிலவி வருவதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர் சந்தன அபேரத்ன, அரச நிர்வாகக் கட்டமைப்பின் செயல்பாட்டுத் திறனைத் தடையின்றிப் பலப்படுத்துவதற்காகவே இந்த அவசரக் கொள் முதல் நியமன நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# 54 ஆயிரத்தை கடந்த டெங்கு நோயாளர்கள்!

கொழும்பு, ஜூலை. 01

தொடர்ந்து பெய்து வரும் மழைகால வானிலை காரணமாக, நாட்டில் டெங்கு காய்ச்சலின் பரவல் தொடர்ந்து தீவிரமடைந்து வருகிறது.

அதன்படி, நாட்டில் பதிவான டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 54,000 ஐ தாண்டியுள்ளது என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் இயக்குநர் மருத்துவர் கபில கன்னங்கர, நேற்று நாட்டில் பதிவான டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 54,189 என்று தெரிவித்தார்.

தினமும் பதிவாகும் நோயாளிகளின் எண்ணிக்கை 950 முதல் 1,000 வரை உள்ளது என்றும் அவர் கூறினார். (அ)

# வர்த்தக அமைச்சர் இலங்கையின் ‘லீசிங் தந்தை’ ஆகப் போகின்றார்!

## அசேல சம்பத் விமர்சனம்

கொழும்பு, ஜூலை. 01

அரசாங்க ஊழியர்களுக்கு தவணை முறையில் அரிசி வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள வர்த்தக அமைச்சர், இலங்கை வரலாற்றில் உணவுப் பொருள்களை கூட லீசிங் முறையில் வழங்கிய முதலாவது அமைச்சராக இடம்பிடிக்கப் போகின்றார் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

தேசிய நுகர்வோர் முன்னணி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இந்த விமர்சனத்தை முன்வைத்தார்.

அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சர் அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ள திட்டத்தில், அரச ஊழியர்களுக்கு 20 கிலோ கிராம் அரிசியை தவணை முறையில் பெற்றுக்கொள்ளும் வகையில் வழங்குவதாக அறிவித்துள்ளதாக அசேல சம்பத் தெரிவித்தார்.

“அரிசி போன்ற அடிப்படை உணவுப் பொருளை கூட தவணை முறையில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது மிகப் பெரிய தவறான நடவடிக்கை” என அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகளின் உரிமைகளுக்காக போராடியதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இன்று விவசாயிகளும் அரச ஊழியர்களும் எதிர்கொள்ளும் நிலைமையை கவனிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், கிராமப்புறங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்க மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதாக அரசாங்கம் கூறியிருந்த போதிலும், நெல் மற்றும் அரிசி தொடர்பான தற்போதைய நிலைமைகள் குறித்து கேள்விகள் எழுந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஊடக விவாதம் ஒன்றில் வர்த்தக அமைச்சர் கடினமான கேள்விகளை எதிர்கொண்ட பின்னர், அரச ஊழியர்களுக்கு தவணை முறையில் அரிசி வழங்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அசேல சம்பத் தெரிவித்தார்.

“அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவருவதில் முக்கிய பங்கு வகித்த அரச ஊழியர்களுக்கு இன்று கிடைத்துள்ள நிலை இதுவாகும். இலங்கை வரலாற்றில் உணவுப் பயிரொன்றை லீசிங் முறையில் வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்ட முதலாவது வர்த்தக அமைச்சர் என்ற பெயர் அவருக்கு கிடைக்கலாம்” என அவர் விமர்சித்தார்.

இதன் காரணமாகவே வர்த்தக அமைச்சர் “லீசிங் தந்தை” என அழைக்கப்படும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளதாக அசேல சம்பத் மேலும் தெரிவித்தார். (அ)

# அமைச்சர் வசந்த சமரசிங்கவின் அறிவிப்புக்கு கடுமையான எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை. 01

அரச பணியாளர்களுக்கு தவணைக்கட்டண முறையில் அரிசி வழங்குவது தொடர்பாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க கூறிய கருத்துக்கு விவசாய அமைப்புகள் உட்பட பல தரப்பினர் கடும் கண்டனத்தை வெளியிட்டு வருகின்றனர்.

அண்மையில் பொது நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் வசந்த சமரசிங்க “நாங்கள் அரச பணியாளர்களுக்கு சற்று சலுகை விலையில் 20 கிலோ அரிசியை (10 கிலோ எடையுள்ள இரண்டு பக்கற்றுகள் - சிவப்பு அரிசி மற்றும் நாடு அரிசி) தவணைக்கட்டண முறையில் வழங்கவுள்ளோம். அதை அவர்கள் சதொச அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்” என குறிப்பிட்டார்.

இந்தநிலையில், அமைச்சரின் இந்த அறிவிப்புக்கு ரஜரட்டை கூட்டு விவசாய அமைப்பு உள்ளிட்ட தரப்பினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

நல்ல வீடுகள் கட்டவும், வாகனங்கள் வாங்கவும் எதிர்பார்த்து இந்த அரசாங்கத்துக்கு அஞ்சல் மூலம் வாக்களித்த அரச, இன்று 20 கிலோ அரிசியைக் கூட தவணை முறையில் வாங்கும் நிலைக்குத் தள்ளி அரசாங்கம் அவர்களை இழிவுபடுத்தியுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் அரிசி போன்ற உணவுப்பயிர் எனப்படும் உன்னத உணவை, லீசிங் அல்லது தவணை முறையில் வழங்கிய முதல் வர்த்தக அமைச்சர் என்ற பழிச்சொல்லுக்கு வசந்த சமரசிங்க ஆளாகியுள்ளார் .

அரச பணியாளர்களின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தியமைக்கு வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க உடனடியாக அவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
01.07.2026 புதன்கிழமை
பராபவ வருடம், ஆனி 17

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அரசியல் உள்நோக்கம்

அரசியல்வாதிகளுக்கும் குற்றச்செயல்களில் குறிப்பாக, சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கும் இடையிலான தொடர்பு எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். பெரும் பணம் அதிகாரம் மற்றும் அந்த இரு தரப்பினருக்கு இருக்கும் செல்வாக்கு காரணமாக சட்டத்தின் நீண்ட கரங்கள் அவர்களை எட்டுவதற்கு பெரும்பாலும் தவறி விடுகிறது.

முன்னாள் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவின் மகன் ரக்கித்த ராஜபக்ஷவும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரண அமைப்பாளர் சரித் அபேசிங்கவும் கடந்த வாரம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட சம்பவம் பாதாள உலகக் குழுக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொர்புகள் குறித்த விவகாரத்தை குறித்து கருத்துக்களை மீண்டும் பரிமாறிக்கொள்ள வேண்டிய தேவையை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த இருவரும் "ஹரக் கட்டா" என்ற நந்துன் சிந்தக்க விக்கிரமரத்ன என்ற போதைப்பொருள் கடத்தல்காரர் 2023 ஆம் ஆண்டில் டுபாயில் இருந்தவேளை, இலங்கையில் அவரின் மனைவி மதுஷிகா மதுவந்தியிடம் இலஞ்சத்தைக் கேட்டு வாங்கியதாக சந்தேகத்தின் பேரிலேயே கைதாகியிருக்கிறார்கள். அவர்களை ஜூலை 3 வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. நந்துன் சிந்தக்க 2023. மார்ச்சில் மடகாஸ்கரில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் இலங்கையின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜேதாஸ ராஜபக்ஷவின் மகன் என்பதால் இந்த விவகாரம் கூடுதல் பிரபல்யத்தைப் பெற்றிருக்கிறது. விஜேதாஸ 2022 - 2024 காலப்பகுதியில் நீதியமைச்சராக இருந்தவர் என்பதால் அவரது மகன் மீதான இலஞ்சக் குற்றச்சாட்டு பாரதூரமானதாக நோக்கப்படுகிறது.

விஜேதாச ஊழலுக்கு எதிரான ஒரு "போராளியாக" பொதுவெளியில் தன்னை முன்னிறுத்தியவர் என்பதால் அவரது மகன் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஒருவரின் மனைவியிடம் இலஞ்சத்தைப் பெற்றதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு எந்தவொரு அரசியல் தலைவரினதும் நேர்மை மற்றும் நம்பகத்தன்மை பற்றி மக்கள் சந்தேகிக்ககூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

மகன் கைது செய்யப்பட்ட உடனடியாக விஜயதாஸ இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அலுவலகத்துக்குச் சென்று அவரைப் பார்வையிட்டார் என்ற போதிலும், இதுவரையில் பகிரங்கமாக கருத்து எதையும் கூறவில்லை. ஆனால், தந்தையின் வாயை அடைப்பதற்காகவே மகன் இலக்கு வைக்கப்பட்டிருப்பதாக அவர்களது குடும்பத்துக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகின.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளை அண்மைக்காலமாக உரத்து விமர்சனம் செய்பவர்களில் ஒருவராக விஜேதாஸ ராஜபக்ஷ விளங்குவதாக கூறப்படுகிறது. உரத்துச் சத்தமிடுபவர்கள்தான் முதலில் கைது செய்யப்படுவார்கள் என்று சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறியதை விஜேதாஸவின் மகனின் கைதுடன் இணைத்து சிலர் விமர்சனங்களை முன்வைப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

விஜேதாஸவின் மகன் கோடிக்கணக்கில் இலஞ்சம் பெற்றதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டின் தகுதியை நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும். அது தொடர்பில் வேறு எவரும் தீர்மானம் ஒன்றுக்கு வரமுடியாது. ஆனால், அரசியல் உயர் மட்டத்தவர்கள் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் என்று வரும்போது அவற்றுக்கு அரசியல் நோக்கம் இருப்பதாக எடுத்த எடுப்பிலேயே விமர்சனத்தை முன்வைக்கும் போக்கு இலங்கை அரசியலில் வழமையானதாகி விட்டது. சட்டம் அதன் கடமையைச் செய்வதை அனுமதிக்காமல், குற்றச்சாட்டின் தகுதியை வெறுமனே அரசியல் காரணியை அடிப்படையாக வைத்து விமர்சனங்களைச் செய்வதும் கூட அரசியல் உள்நோக்கம் கொண்டது தான்.

# நிலநடுக்கம்;

## வெனிசூலா அரசின் திறனுக்கும் டொனால்ட் ட்ரம்பின் வாக்குறுதிகளுக்கும் பெரிய சோதனை



**ஏற்கனவே** பல ஆண்டுகால நெருக்கடியிலும், அமெரிக்காவால் நிகழ்த்தப்பட்ட நிக்கோலஸ் மதுரோவின் சட்டவிரோதக் கடத்தலாலும் நிலைகுலைந்து போயிருக்கும் ஒரு நாட்டிற்கு, இந்த இயற்கை பேரிடர் எவ்வித இரக்கமுமின்றி உண்மையான நிலைமையை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

ஒரு நிலநடுக்கம் ஏற்படுத்தும் பேரழிவு என்பது, அந்த அதிர்வு தரும் பாதிப்பை விடவும் அதற்கு முன்பும் பின்பும் என்ன நடந்தது என்பதைப் பொறுத்தே அமைகிறது. கடந்த வாரம் (புதன்கிழமை) வெனிசுலாவை அடுத்தடுத்து தாக்கிய இரட்டை நிலநடுக்கங்கள் 1900-ஆம் ஆண்டிற்குப் பிறகு அங்கு ஏற்பட்ட மிகப்பாரிய நிலநடுக்கங்களாகும். ரிச்டர் அளவில் 7.2 மற்றும் 7.5 ஆகப் பதிவான இவை பூமிக்கு மிக அருகில் (shallow temblors) ஏற்பட்ட அதிர்வுகளாகும்.

பொதுவாக இத்தகைய அதிர்வுகள் ஆழமான பகுதியில் ஏற்படும் நிலநடுக்கங்களை விட அதிக சேதத்தை விளைவிக்கக்கூடியவை. திங்கட்கிழமையும் அதன் தொடர் அதிர்வுகள் (aftershocks) நீடித்தன. குறைந்தது 1,450 பேர் உயிரிழந்துள்ளனர், பல்லாயிரக்கணக்கானோரைக் காணவில்லை. 3,000-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

வெனிசூலாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்திற்குச் சமமான 6.7 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள முக்கிய உள்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் மதிப்பிட்டுள்ளது் 38 மருத்துவமனைகளை திருத்தியமைக்க வேண்டியிருக்கிறது. 1.8 மில்லியன் மக்களுக்கு அவசர உதவி தேவைப்படுவதாக யுனிசெஃப் தெரிவித்துள்ளது.

இத்தகைய பேரிடர்களின் பாதிப்பு, அவை தாக்குவதற்கு முன்பு அந்த நாடு இருந்த நிலைமையையும், அதை எதிர்கொள்ளும் அரசின் திறனையும் பிரதிபலிக்கிறது. உயிர் பிழைப்பதற்கான மிக முக்கியக் காலக்கெடுவாகக் கருதப்படும் 72 மணிநேரம் முடிந்த பிறகும், கடந்த சில நாட்களில் நடந்த அசாதாரண மீட்புப் பணிகள் மகிழ்ச்சியைத் தந்தாலும், வெனிசுலாத் தலைவர்களின் உண்ஸ்ம முகம் அத்தனை சிறப்பாக இல்லை.

தலைநகர் காரகாஸில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட வந்த இடைக்கால ஜனாதிபதி டெல்சி ரொட்ரிக்ஸை அங்கு உயிர்தப்பிய மக்கள் சூழ்ந்து கூச்சலிட்டுத் தங்கள் எதிர்ப்பைக் காட்டினர். தன்னார்வ மீட்புக் குழுவினர் மற்றும் நிவாரணப் பணியாளர்களின் அதிவேகச் செயல்பாடுகளுக்கு நேர்மாறாக, அரசின் அதிகாரப்பூர்வ நடவடிக்கைகள் மந்தமாக இருப்பதால் மக்கள் மத்தியில் ஆவேசம் அதிகரித்து வருகிறது தாங்கள் கைவிடப்பட்டதாகவும், தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிலையில் இருப்பதாகவும் உள்ளூர் சமூகங்கள் உணர்கின்றன.

அவசரக்கால மீட்புப் பணிகளுக்குப் பணம் ஒதுக்குவதை விட, இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புப் படைகளுக்கே அரசு அதிக நிதியைக் கொட்டியுள்ளது என்பதை இந்த நிலநடுக்கம் அம்பலப்படுத்தியுள்ளது. இந்த அரசு தன் சொந்த மக்களை ஒடுக்கவும், முடக்கவும் மட்டுமே தயாராக இருக்கிறதே தவிர, அவர்களுக்கு உதவ அல்ல. அரசியல் ஆய்வாளர் ஆர்லாண்டோ ஜே. பெரெஸ் எழுதியது போன்று "ஒரு அரசாங்கம் உண்மையில் என்ன செய்ய முடியும், இத்தனை காலமும் பொதுப் பணத்தை வைத்துக்கொண்டு அது என்ன செய்து கொண்டிருந்தது என்பதை பேரிடர்கள் நிர்பந்தித்துக் காட்டிவிடுகின்றன."

இது ஒரு நாட்டின் அரசியல் பாதையை முற்றிலுமாக மாற்றியமைக்கக்கூடும்.பல ஆண்டுகால அரசு நிர்வாகச் சீர்கேடு, ஊழல் மற்றும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் காரணமாக 80சதவீத வெனிசுலா மக்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர் மக்கள் தொகையில் கால் பகுதியினர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அதன் ஆண்டு பணவீக்க விகிதம் 600 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ளது இது உலகிலேயே மிக அதிகமாகும்.

சுகாதாரக் கட்டமைப்பு முற்றிலும் முடங்கிக் கிடக்கிறது. கடந்த ஜனவரி மாதம் ட்ரம்ப் நிர்வாகம் அப்போதைய ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை சட்டவிரோதமாகக் கடத்தியது, அந்த ஆட்சியை அப்படியே விட்டுச் சென்றாலும், நாட்டை அரசியல் குழப்பத்தில் ஆழ்த்தியது. தனது நடவடிக்கைகள். வெனிசூலாவில் "வளத்தைக் கொணரும்" என்று அமெரிக்க ஜனாதிபதி வாக்குறுதி அளித்தார். நாட்டின் எண்ணெய் விற்பனையைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதும், தனியார் முதலீட்டாளர்களுக்கு அதைத் திறந்துவிடுவதுமே அவரது முக்கிய நோக்கமாக இருந்தது.

தனது வழக்கமான முரட்டுத்தனமான பாணியில், பேரிடர் பகுதிக்கு வெளியே "மக்கள் தெருக்களில் ஆடுகிறார்கள்" என்று ட்ரம்ப் பிரகடனப்படுத்தினார். பலர் மதுரோ பதவியிலிருந்து விலக வேண்டும் என்று விரும்பிய போதிலும், அமெரிக்காவுடன் ரொட்ரிக்ஸ் செய்துகொண்ட ஒப்பந்தம் அவரது கட்சியின் எஞ்சியிருந்த ஒரே கொள்கை அடிப்படையான "ஏகாதிபத்திய எதிர்ப்பு" (anti-imperialism) என்பதை அழித்து விட்டது் அத்துடன் 1976 ஆம் ஆண்டில் எண்ணெய் துறை தேசியமயமாக்கப்பட்டதையும் தலைகீழாக மாற்றியுள்ளது.

மதுரோவின் துணை ஜனாதிபதியாக இருந்த ரோட்ரிக்ஸூடன் அமெரிக்கா உடன்பாடு செய்துகொண்டதாலும், நாட்டை விட்டு வெளியேறி வாழும் பழமைவாத எதிர்க்கட்சித் தலைவரான மரியா கொரினா மச்சாடோவை தொடர்ந்து புறக்கணிப்பதாலும், இடதுசாரிகளின் கோபத்திற்கு இணையாக ஆட்சிக்கு எதிரானவர்களிடமும் ஏமாற்றம் அதிகரித்துள்ளது.

மதுரோவைப் பிடித்த பிறகு வெனிசுலாவின் "பொறுப்பு" தன்னுடையது என்று ட்ரம்ப் அறிவித்தார்.

அந்த அடிப்படையில், அவர் இப்போது முன்வந்து உதவ வேண்டும். ஆனால் அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி முகமை (USAID) பலவீனப்படுத்தப்பட்டதும், நிவாரணப் பணியாளர்கள் பெருமளவில் பணிநீக்கம் செய்யப்பட்டதும், அவரது விருப்பத்தையும் திறனையும் சந்தேகத்திற்குள்ளாக்குகிறது.

நிவாரணப் பணிகளுக்காக அமெரிக்கா 300 மில்லியன் டொலர்கள் நிதியுதவி அளிப்பதாக உறுதியளித்துள்ளதுடன் உலகெங்கிலும் இருந்து அனுப்பப்பட்ட 2,400 மீட்புப் பணியாளர்களில் அவர்களின் குழுக்களும் அடங்கும். இது ஒரு நல்ல தொடக்கம் தான்.

ஆனால், வெனிசுலா மக்களுக்கு நிலநடுக்கத்தின் உடனடித் தேவைகளுக்கு மட்டுமின்றி, இந்தத் தொடர் நெருக்கடியில் இருந்து மீள்வதற்குக் கூட்டான நீடித்த ஆதரவு தேவைப்படுகிறது் அதற்கு அவர்கள் தகுதியானவர்களும் கூட. அதுதான் ரொட்ரிக்ஸூக்கும் அவரது கட்சிக்கும் மேற்கு அரைக்கோளத்தில் தலைமைத்துவத்திற்கு உரிமை கோரும் அமெரிக்காவிற்கும் உண்மையான சோதனையாக இருக்கும்.

(தி கார்டியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
கணவன் மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும்.

**இடபம்**
சந்திராஷ்டம இருப்பதால் தெளிவான முடிவுகளை எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் தொழில் ரகசியங்களை சொல்லி கொள்ள வேண்டாம். எச்சரிக்கை தேவைப்படும்.

**மிதுனம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்பட தொடங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வாசூலாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். அதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

**சிம்மம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்களின் அன்பு தொல்லை குறையும். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும்.

**கன்னி**
பழைய இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டது அறிந்து பூர்த்தி செய்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மறதியால் பிரச்னைகள் வந்து நீங்கும். குடும்பத்தாருடன் இணக்கமாக செல்லவும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது. எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
கணவன் மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உத்தியாகத்தில் விவாதம் வரக் கூடும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஆதரவு பிறக்கும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. புது ஒப்பந்தம் வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

**மீனம்**
எதையும் தாங்கும் மனோபலமும் கிடைக்கும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்பொழுது உங்களுக்கு உதவி செய்வார்கள். உத்தியோகத்தில் நம்பிக்கையை பெறுவீர்கள். மதிப்பு கூடும் நாள்.

# சிறுவருக்கு பீடி, சிகரெட் விற்ற 13 கடைகள் மீது நடவடிக்கை!

## கிளிநொச்சி பொலிஸார் அதிரடி

கொழும்பு, ஜூலை. 01

கிளிநொச்சி நகர்ப் பகுதிகளில், 21 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு சட்டவிரோதமாக புகைப் பொருள்களை விற்பனை செய்த 13 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சிறுவர்களை இலக்கு வைத்து சிகரெட் மற்றும் பீடி உள்ளிட்ட புகைப்பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கிளிநொச்சி பொலிஸார் மறைமுக நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

அதன்படி, சிறுவன் ஒருவரிடம் பணம் வழங்கி, வர்த்தக நிலையங்களில் இருந்து புகைப் பொருள்களை வாங்குமாறு பொலிஸார் ஏற்பாடு செய்தனர். சிறுவனுக்கு புகைப்பொருள்கள் விற்பனை செய்யப்பட்ட தருணத்தில், அங்கு கண்காணிப்பில் இருந்த பொலிஸாரிடம் வர்த்தகர்கள் சிக்கினர்.

இதனைத் தொடர்ந்து நகரின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக சோதனைகளில், சிறுவர்களுக்கு புகைப்பொருள்களை விற்பனை செய்த 13 வர்த்தக நிலையங்கள் அடையாளம் காணப்பட்டன.

சம்பந்தப்பட்ட வர்த்தகர்களுக்கும், அந்த வர்த்தக நிலையங்களுக்கும் எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்கு தொடருவதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு கிளிநொச்சியில் விழிப்புணர்வு நிகழ்வு

கிளிநொச்சி, ஜூலை. 01

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கும், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் வீதி பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமான விசேட கலந்துரையாடல் நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், வீதி விபத்துக்களை குறைப்பதற்கான நடைமுறை நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டன.

கலந்துரையாடலில் பொலிஸ் உயர் அதிகாரிகள், போக்குவரத்து பொலிஸார், சுகாதாரப் பிரிவினர், வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபை பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் தலைவர்கள் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

இதில் வீதி ஒழுங்குகளைப் பின்பற்றுவதன் அவசியம், இளைஞர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், விபத்து அபாயப் பகுதிகளை அடையாளம் கண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. (அ)

# கருவேப்பங்குளம் மாணவிகள் மாகாண மட்டத்தில் சாதனை!

வவுனியா, ஜூலை. 01

வவுனியா - கிடாச்சூரி கருவேப்பங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவிகள் புதிய சாதனைகளுடன் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அந்தவகையில் வடமாகாண மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டியில் 16 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் குண்டு போடுதலில் ச.சரணியா மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

அத்துடன், 16 வயதின் கீழ் தட்டு எறிதலிலும் ச.சரணியா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன், 18 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் ரா.கெரிசிகா 800 மீற்றர் ஓட்டத்தில் முதலாம் இடத்தையும், 1500 மீற்றர் ஓட்டத்தில் முதலாம் இடத்தையும்,



3000 மீற்றர் ஓட்டத்தில் முதலாம் இடத்தை பெற்று மாகாணத்தில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை அதிபர் பா. கேமலதனின் வழிகாட்டுதலில் உடற்கல்வி ஆசிரியர் சி.சக்தி மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஜெ.தட்சா ஆகியோரின் வழிப்படுதலில் குறித்த பாடசாலை மாணவர்கள் மாகாண மட்டத்தில் மேலும் பல இடங்களை தம்வசப்படுத்தி மாகாண மட்டத்தில் 50 புள்ளிகளை பெற்று, வவுனியா வடக்கு வலயத்திற்கு அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்த பாடசாலை என்ற பெருமையையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மானிப்பாய் இந்து கல்லூரியின் நாடக விழா இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஜூலை. 01

மானிப்பாய் இந்துக்கல்லூரியின். வருடாந்த நாடகவிழா 2026 நிகழ்வு இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் மாலை 6 மணிக்கு கல்லூரியின் துரைராஜா திறந்த வெளி அரங்கில் கல்லூரி அதிபர் துரைரட்ணம் திலீப்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப்பல்கலைக் கழக நாடகமும் அரங்கக் கலைகளும் துறைத் தலைவர் கலாநிதி நவதர்சினி கருணாகரன், சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவன் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி அதிபர் கணேஷ் உதயரூபன் , பழைய மாணவியான இலங்கை தொலைத் தொடர்பு கூட்டுத்தாபன ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் திருமதி கமலேஸ்வரி மன்றுலாடி ஆகியோரும் பிரதம நடுவராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாபூஷணம் க.இ.கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

நாடக ஆற்றுகைகளாக முதலாம் நாள் மாணிக்கர் இல்ல நாடக ஆற்றுகை சுந்தரர் இல்ல நாடக ஆற்றுகை ஆசிரியர்களின் நாடக ஆற்றுகை இரண்டாம் நாள் நிகழ்வாக சம்பந்தர் இல்ல ஆற்றுகை வாகீசர் இல்ல ஆற்றுகை பழைய மாணவர்களின் ஆற்றுகை ஆகியவை இடம்பெறவுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தெளிவற்ற கல்விச் சீர்திருத்தங்களால் மாணவர்கள் எதிர்காலம் கேள்விக்குறி!

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 01

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கல்விச் சீர்திருத்தங்கள் எவ்வித முறையான திட்டமிடலும் இன்றி, தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கல்வி முறையில் நிலவும் தற்போதைய நெருக்கடிகளுக்கு முறையான தீர்வினைத் தரக்கூடிய தொலைநோக்குப் பார்வை கொண்ட ஒரு சீர்திருத்தமே மாணவர்களின் எதிர்கால நலனுக்கு அவசியமான நிலையில், தற்போதைய திட்டங்களின் தெளிவற்ற தன்மையே அனைத்துப் பிரச்னைகளுக்கும் முதன்மைக் காரணமாக அமைந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கல்விச் சீர்திருத்தங்கள் எவ்வித முறையான திட்டமிடலும் இன்றி, தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த தெளிவற்ற தன்மையே தற்போதைய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டிலும் பாடத்திட்டங்கள் மாற்றமடையும் எனக் கூறப்பட்ட போதிலும், இதுவரை எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. மாறாக, தற்போது கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகள் மாத்திரம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கல்விச் சீர்திருத்தத்திற்காக 5 பிரத்தியேகக் குழுக்கள் நியமிக்கப்பட்டு ஆலோசனைகள் தொடர்ந்து பெறப்பட்டு வருகின்ற நிலையிலும், வருடங்கள் கடந்தும் கல்வி முறையில் உண்மையாகவே மாற வேண்டிய பாடத்திட்டங்கள் இன்னும் மாற்றப்படவே இல்லை.

அதேநேரம், ஜனாதிபதி செயலாளரின் கலந்துரையாடலைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட உத்தியோகப்பூர்வ ஊடக அறிக்கையில், நாட்டில் உள்ள 6500 பாடசாலைகளில் தேவையான வசதிகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ள தகவல் உண்மைக்குப் புறம்பானது. நாட்டில் உள்ள 10,100 மொத்தப் பாடசாலைகளில், குறைந்தபட்சம் 500 பாடசாலைகளிலாவது இந்த வசதிகள் உண்மையாகவே முழுமைப் படுத்தப்பட்டுள்ளதா என்ற கேள்வி எல்லோரின் மத்தியிலும் எழுகிறது. மேலும், 373 பாடசாலைகளை இந்தச் சீர்திருத்தங்களுக்காக அபிவிருத்தி செய்யப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், வெறும் வாய்மொழி அறிக்கைகள் மூலமாக மட்டும் கல்விச் சீர்திருத்தங்களுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஒருபோதும் பூர்த்தி செய்துவிட முடியாது-என்றார்.

(அ)

# 6 ஆண்டுகளுக்குள் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியுள்ள 267,138 மாணவர்கள்!

கொழும்பு, ஜூலை. 01

கடந்த 2018ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையிலான ஆறு ஆண்டு காலப்பகுதியில் 267,138 மாணவர்கள் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியுள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

2018 முதல் 2024 வரையான வருடாந்த பாடசாலை மாணவர் தொகை கணக்கெடுப்பு தரவுகளின் அடிப்படையில், முதலாம் தரம் முதல் 10ஆம் தரம் வரை ஒவ்வொரு வகுப்பிலும் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் விலகிய விகிதங்களை கருத்தில் கொண்டு, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சமன்பாட்டைப் பயன்படுத்தி இந்தத் தரவுகள் கணக்கிடப்பட்டுள்ளன.

அதற்கமைய, பாடசாலை கல்வியை இடைநிறுத்திய மாணவர்களின் எண்ணிக்கை 2018 இல் 38,839 ஆகவும், 2019 இல் 41,503 ஆகவும், 2020 இல் 32,540 ஆகவும், 2021 இல் 25,492 ஆகவும், 2022 இல் 52,596 ஆகவும், 2023 இல் 50,345 ஆகவும், 2024 இல் 25,823 ஆகவும் பதிவாகியுள்ளது.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்கால கொரோனா பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவே ஏராளமான மாணவர்கள் தங்கள் படிப்பை இடைநடுவில் நிறுத்தியுள்ளமை புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

அவ்வாறு இடைவிலகிய மாணவர்களில் சிலர் சர்வதேச பாடசாலைகளில் சேருதல் அல்லது குடும்ப உறுப்பினர்களுடன் வெளிநாடுகளுக்குச் செல்லுதல் போன்ற காரணங்களால் பாடசாலை அமைப்பிலிருந்து விலகினாலும், அவர்கள் தொடர்ந்து முறையான கல்வியைப் பெற்றுக் கொண்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

பிள்ளைகள் பாடசாலை கல்வியை இடைநிறுத்துவதற்குத் தனிப்பட்ட காரணங்கள், பாடசாலை சார்ந்த காரணங்கள், குடும்பம் சார்ந்த காரணங்கள், சமூகக் காரணங்கள் மற்றும் பிற கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்றவை முக்கிய காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

(அ)

# ரூ.42 இலட்சம் பெறுமயுள்ள வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் சீனப் பெண் கைது!

கொழும்பு, ஜூலை. 01

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, சுமார் 42 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற சீன நாட்டு பெண் ஒருவர் சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் திங்கள்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில், கிரீன் சேனல் வழியாக சந்தேகத்திற்கிடமான முறையில் வெளியேற முயன்ற குறித்த பெண் பயணி, சுங்க அதிகாரிகளால் சோதனைக்குட்படுத்தப்பட்டபோதே வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 40 வயதுடைய சீன நாட்டு பெண் தொழிலதிபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன் தினம் அதிகாலை 12.30 மணியளவில் சீனாவின் குன்மிங் நகரிலிருந்து சைனா ஈஸ்டர்ன் விமானச் சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவர் கொண்டு வந்த பயணப் பொதிகளில், மறைத்து வைக்கப்பட்டிருந்த சீனாவில் தயாரிக்கப்பட்ட 28,000 சிகரெட்டுகளைக் கொண்ட 140 சிகரெட் கார்ட்டூன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவற்றின் சந்தைப் பெறுமதி சுமார் 42 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# மத்திய மாகாணத்தில் டெங்கு உச்சநிலையில்!

கொழும்பு, ஜூலை. 01

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலின் பரவல் முன்னெப்போதும் இல்லாதவாறு பாரியளவில் அதிகரித்துள்ளதாக மாகாண சுகாதார அதிகாரிகள் உத்தியோகபூர்வமாக எச்சரித்துள்ளனர்.

நிலைமை தீவிரமடைந்துள்ளதை அடுத்து, மாவட்டத்தின் பல முக்கிய பகுதிகளை அதி உயர் டெங்கு அபாய வலயங்களாகச் சுகாதார அதிகாரிகள் அவசரமாக அடையாளப்படுத்தியுள்ளனர்.

இதற்கமைய காலகெதர, கம்பளை, உடபலாத்த, இலங்கவத்தை மற்றும் கஹடபிட்டிய அமுனுகுர ஆகிய பிரதேசங்கள் அதிக ஆபத்துள்ள வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

கண்டி கங்கவட்ட கோரளை சுகாதாரப் பிரிவுக்கு உட்பட்ட வாவெத, கீழ் இரியாகம, அம்பிட்டிய, பல்லேகம, தென்னேகும்பூர, மாகந்த, ஹீரஸ்ஸகல, பஹிரவகந்த, கெடம்பே, கட்டுகேலே, முல்கம்பொல, அஸ்கிரிய, வாதபுலுவ மற்றும் தல்வத்தை உள்ளிட்ட இருபது கிராமியப் பகுதிகள் உத்தியோகபூர்வமாகச் சிவப்பு எச்சரிக்கை வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவற்றுடன் குண்டசாலை பிரிவின் சிறிமல்வத்தை கிழக்கு, நாவலப்பிட்டிய வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகள், உடுநுவர பிரிவின் மீவத்துர மற்றும் வெரெல்லகம பிரிவின் ரணவன மேற்கு ஆகிய இடங்களும் இந்த அதி உயர் ஆபத்து வலயப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் யடிநுவர மற்றும் கடுகண்ணாவை சுகாதாரப் பிரிவுகளுக்கு உட்பட்ட பிலாபிட்டிய, கன்னொருவ கிழக்கு மற்றும் மத்திய பகுதிகள் ஆபத்தான வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாகச் சுகாதாரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புலிகள் பாவித்த சினைப்பர் உட்பட ஆயுதங்களை மீட்டது அதிரடிப்படை!

## அம்பாறையில் சம்பவம்

அம்பாறை, ஜூலை. 01

தமிழீழ விடுதலைப்புலிகள் பாவித்ததாக சந்தேகிக்கப்படும் ஸ்னைப்பர் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை சாகாமம் விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் விரிவிற்குட்பட்ட கஞ்சிக்குடிச்சாறு பக்மிட்டியா காட்டுப்பகுதியில் நுட்பமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வழமை போன்று ரோந்து சென்ற விசேட அதிரடிப்படைக்கு கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றிற்கமைய இத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.



மீட்கப்பட்ட ஆயுதங்கள் நீண்ட காலம் மறைத்து வைக்கப்பட்டிருந்ததால் துருப்பிடித் திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் ஸ்னைப்பர் துப்பாக்கி -01 ஒரு தொலைநோக்கி -01 ரவைக்கூடு - 01 தோட்டாக்கள் -07 உள்ளிட்ட ஆயுதங்கள் உள்ளடங்குகின்றன.

இவற்றை தமன பொலிஸ் நிலையத்தில் சட்ட நடவடிக்கைக்காக விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர். (அ)

# நிலாவெளி கடற்கரை நோக்கி படையெடுக்கும் சுற்றுலாவிகள்!

திருமலை, ஜூலை. 01

திருகோணமலையில் உள்ள சுற்றுலாத் தளத்தில் நிலாவெளி கடற்கரையும் பிரதான இடத்தை பிடித்துள்ளது.

தினமும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இதனை நாடி வருகின்றனர்.

தற்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை இங்கு அதிகமாக காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

குறித்த நிலாவெளி கடலில் நீராடி சுதந்திரமாக தங்கள் பொழுது போக்கை கழிக்கின்றனர்.

இங்கிருந்து கடல் மார்க்கமாக பயணித்து பார்க்கக்கூடிய தேசிய பூங்காக்களில் ஒன்றான புறாத் தீவும் முக்கியம் பெற்று விளங்குகிறது.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள குறித்த தீவை சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டு வருகின்றனர். (அ)



# குடிதண்ணீர் நிறுவனம் என்ற போர்வையில் இயங்கிய இரகசிய மது நிலையம் முற்றுகை!

கொழும்பு, ஜூலை. 01

கடுவலை பகுதியில், பதிவு செய்யப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் என்ற போர்வையில், மிக இரகசியமாக நடத்தப்பட்டு வந்த மதுபான உற்பத்தி நிலையம் ஒன்றை, மேல் மாகாண வட பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவினர் அதிரடியாக முற்றுகையிட்டுள்ளனர்.

இந்தச் சோதனையின்போது 18,500 இற்கும் மேற்பட்ட மதுபானப் போத்தல்கள் மற்றும் கஞ்சா போதைப்பொருள்களைக் கைப்பற்றியுள்ள பொலிஸார், குறித்த நிலையத்தில் இருந்த 6 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

மேல் மாகாண வட பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கடுவலை சுதர்ஷன வீதியில் அமைந்துள்ள ஒரு குறிப்பிட்ட சொகுசு வளாகத்தில் இந்தச் சோதனை நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வெளிப்பார்வைக்குச் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் போத்தல்களைத் தயாரித்து விநியோகிக்கும் நிறுவனம் போலக் காட்சியளித்த அந்த வளாகத்துக்குள், சட்டவிரோதமான முறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபானங்கள் தயாரிக்கப்பட்டு வந்ததை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இதன்போது, தலா 180 மில்லி லீற்றர் அளவுடைய 18,575 உள்நாட்டு மதுபான போத்தல்கள் (மொத்தம் 3,345.5 லீற்றர்), வெளிநாட்டு மதுபான லேபிள்கள் ஒட்டப்பட்ட 1 லீற்றர் அளவுடைய 4 போத்தல்கள், 750 மில்லி லீற்றர் அளவுடைய ஒரு போத்தல் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டுள்ள 6 சந்தேக நபர்களும் 30, 43, 58, 59 மற்றும் 62 ஆகிய வயதுகளை உடையவர்கள் என்றும் இவர்கள் அனைவரும் மிஹிந்தலை, மருதானை, வத்தளை, தெற்கு வேவெட, கெட்டலாவ மற்றும் சிப்பிகுளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பிள்ளையானுக்கு ஜூலை 13 வரை விளக்கமறியல்

மட்டக்களப்பு, ஜூலை. 01

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையானை ஜூலை 13ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட பிள்ளையானுக்கு, நீதிமன்றம் இந்த விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கடந்த 14 நாள்களுக்கு முன்னர் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட 6 குற்றச்சாட்டுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் நேற்று பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பிள்ளையான் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டார். (அ)

# நீதிபதி கருணாகரனுக்கு கல்முனையில் பிரியாவிடை

அம்பாறை, ஜூலை. 01

கல்முனை மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக சிறப்பாகப் பணியாற்றி பதவி உயர்வு பெற்று தற்போது கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள தர்மரட்ணம் கருணாகரனுக்கான பிரியாவிடை நிகழ்வு, கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மருதமுனையில் சிறப்பாக நடைபெற்றது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான திருமதி ஆரிக்கா காரியப்பர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மேல்நீதிமன்ற நீதிபதி தர்மரட்ணம் கருணாகரனும் அவரது குடும்ப உறுப்பினர்களும், கல்முனை மேலதிக மாவட்ட நீதிபதி கே.எல்.எம். சாஜித், கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட சட்டத்தரணிகளும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

நீதித்துறைக்கான அவரது அர்ப்பணிப்பு மற்றும் முன்மாதிரியான சேவையைப் பாராட்டும் வகையில் நினைவுச் சின்னங்களும் வாழ்த்துப் பாக்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (அ)




# இனவாதத்தை விதைத்து நாட்டை சீர்குலைத்த யுகம் முடிந்துவிட்டது!

## அமைச்சர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை. 01

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இனவாதத்தையும் மதவாதத்தையும் விதைத்து நாட்டைச் சீர்குலைத்த யுகம் முழுமையாக முடிவுக்கு வந்துவிட்டது என்று வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

சகல இன மக்களும் ஒன்றிணைந்து வாழக்கூடிய ஒழுக்கமானதும் நாகரிகமானதுமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாட்டை தற்போதைய அரசு கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு தாமரைத் தடாகத்தில் நடைபெற்ற அகில இலங்கை முஸ்லிம் இளைஞர் முன்னணியின் 76 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்-

கடந்த காலத்தில் எமது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. பல தசாப்தகால யுத்தத்துக்குப் பின்னர் தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தி, நாட்டைக் கட்டியெழுப்புதற்கான சிறந்த வாய்ப்பு எமக்குக் கிடைத்த போதிலும், யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகத் திட்டமிடப்பட்ட முறையில் இனவாதமும் மதவாதமும் விதைக்கப்பட்டு, நாடு மீண்டும் பிரிவினைக்குள் தள்ளப்பட்டது.

எனினும், 2024 ஆம் ஆண்டின் அரசியல் மாற்றத்துக்குப் பின்னர் அவ்வாறான எந்தவொரு இன, மதவாத மோதல்களுக்கும் நாட்டில் இடமில்லை.

நாட்டின் பொருளாதாரம், ஒழுக்கம், சட்டம் மற்றும் நாகரிகத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட சகலரும் ஒற்றுமையுடன் இணைந்து வாழவேண்டும்.

சிங்களவர்களாக இருந்தாலும் சரி, முஸ்லிம்களாக இருந்தாலும் சரி நாம் அனைவரும் மனிதர்கள். எமக்கு மத்தியில் எந்தவொரு பாகுபாடும் இல்லை. நாம் அனைவரும் சாதி, மதம், மொழி அல்லது வேறு எந்தவொரு வேறுபாடுமின்றி ஒரே தாயின் பிள்ளைகள் போல ஒற்றுமையுடன் வாழவேண்டும்- என்றார். (அ)

# இறைவரி அதிகாரி எனக் கூறி பண மோசடி செய்தவர் கைது!

கொழும்பு, ஜூலை. 01

இறைவரித் திணைக்களத்தின் அதிகாரி எனப் போலி அடையாளத்தைக் காட்டி பண மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவர் கொம்பனித்தெரு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இறைவரித் திணைக்களத்தின் அதிகாரி எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, சந்தேக நபர் பல்வேறு நபர்களிடம் பணம் மோசடி செய்துள்ளதாக கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளதாகக் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கல்கமுவ பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபர் ஆவார்.

சந்தேக நபர் இதற்கு முன்னரும் இது போன்ற பண மோசடி சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அஸ்வெசும பட்டியலில்...

இருந்த "இடைநிலை" பிரிவைச் சேர்ந்த சுமார் 4 இலட்சம் குடும்பங்கள் ஏற்கனவே இந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

தற்போது அஸ்வெசும பட்டியலில் எஞ்சியுள்ளவை "அதி வறிய" மற்றும் "வறிய" பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 13 இலட்சம் குடும்பங்கள் மாத்திரமே என்று அமைச்சர் உபாலி பன்னிலகே சுட்டிக்காட்டினார்.

இதன்படி, அதி வறிய பிரிவில் 9 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்களும், வறிய பிரிவில் 4 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்களும் உள்ளனர்.

அதி வறிய குடும்பங்களுக்கு 17,500 ரூபாயும், வறிய குடும்பங்களுக்கு 10,000 ரூபாயும் கொடுப்பனவாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சர்வதேச நாணய நிதிய...

நிறைவைக் குறிக்கும் வகையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இந்த விஜயத்தின் போது அண்மைக்கால பேரண்டப் பொருளாதார வளர்ச்சிகள் மற்றும் நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் சீர்திருத்தங்களின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்யப்பட்டது.

அரசாங்கம் பொருளாதாரத்தை வழிநடத்தும் விதம் சர்வதேச நாணய நிதியத்தின் பெரும் பாராட்டைப் பெற்றதுடன், நாணய நிதியத்தின் ஆதரவு திட்டங்களைச் செயல்படுத்தும் ஏனைய பல நாடுகளை விட இலங்கை அதிக முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டினர். தொடர்ச்சியான வெளிப்புற அதிர்ச்சிகளுக்கு மத்தியிலும் பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும் சீர்திருத்தத் திட்டங்களுக்காகத் தீவிரமாக அர்ப்பணிப்புடன் இருப்பதற்கும் தூதுக்குழுவினர் அரசாங்கத்திற்குத் தங்களது பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக அரசாங்கம் எடுக்கும் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு தங்களது தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாக சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவினர் உறுதியளித்தனர்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் 07 ஆவது மீளாய்வின் போது இலங்கையின் திட்டச் செயற்பாடுகள் உத்தியோகபூர்வமாக மதிப்பீடு செய்யப்படும் என்றும் தூதுக்குழுவினர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் தெரிவித்தனர். இத்திட்டத்தின் கீழ் இலங்கை பூர்த்தி செய்ய வேண்டிய ஏனைய பொறுப்புகள் இந்த மீளாய்வுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள வெளிப்புற சவால்களை வெல்வதற்கும், நிதி மற்றும் வெளிப்புற ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்கும், மீளெழுச்சித் திறனை வலுப்படுத்துவதற்கும், அதே போல் நீடித்த மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் சீர்திருத்த செயல்முறையின் வேகத்தைத் தொடர்ந்து பேணுவது இன்றியமையாதது என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்கப்படும் அதேவேளையில் பொருளாதார மீட்சியின் பலன்கள் நேரடியாக மக்களைச் சென்றடைவதுக்கு வழிவகுப்பதே அரசாங்கத்தின் இறுதி நோக்கம் என்று ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார். பொருளாதார வளர்ச்சியை மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக மாற்றுவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதில் எதிர்கொண்ட சவால்கள் குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, அமெரிக்காவின் வரிக் கொள்கைகள் 'டித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட அழிவுகள் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் யுத்தச் சூழ்நிலை உள்ளிட்ட வெளிப்புற அதிர்ச்சிகளால் தடைகளும் தாமதங்களும் ஏற்பட்டதாகச் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், பேரண்டப் பொருளாதாரம் மற்றும் சமூக ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்குக் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்ததுடன் நாட்டை மீட்சிப் பாதையில் உறுதியாகக் கொண்டு செல்வதற்குக் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நீடிக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தின் கீழ் மேலும் ஒரு வருடத்திற்கும் குறைவான காலமே எஞ்சியுள்ள நிலையில் இத்திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதில் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாகவும், பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையின் பலன்கள் அனைத்து பிரஜைகளையும் சென்றடைவதை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நீண்ட கால நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் அளவுகோல்களுக்கு இணங்குவது அவசியம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். மேலும் மக்கள் மீது தேவையற்ற சுமைகளை ஏற்படுத்தாமல் அவர்களுக்கு அதிகபட்ச பலன்களை வழங்கும் வகையில் அரசாங்கம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையே நிலவும் நெருக்கமான மற்றும் சாதகமான உறவை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதன்போது வலியுறுத்தினார். இத்திட்டத்தை செயல்படுத்தும் ஒட்டுமொத்த காலப்பகுதியிலும் இரு தரப்பினரும் குறிப்பிடத்தக்க நெகிழ்வுத்தன்மையைக் காட்டியுள்ளதாகவும் அந்த பரஸ்பர புரிதல் மற்றும் ஒத்துழைப்பு காரணமாக சீர்திருத்தத் திட்டத்தை எந்தவொரு தடையுமின்றி சுமூகமாக முன்னோக்கி கொண்டு செல்ல முடிந்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதன்போது இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான நீடிக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கும் நாட்டில் நீண்ட கால பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் சுபீட்சத்தை உறுதி செய்வதற்கும் தொடர்ச்சியான ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கான இரு தரப்பினரதும் அர்ப்பணிப்பு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டு கலந்துரையாடல் நிறைவுற்றது.

இதேவேளை இலங்கை அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றம், நாட்டின் பணவீக்கம் கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்துள்ளமை மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை ஆகியவற்றை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாராட்டியுள்ளனர்.

இலங்கை பெற்றுள்ள பொருளாதார முன்னேற்றம் மற்றும் நாட்டின் அபிவிருத்தியின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதை நோக்கமாகக் கொண்டு, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று அலரி மாளிகையில் வைத்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவைச் சந்தித்தனர்.

இதன்போது, நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த பிரதிநிதிகள் குழுவினர், உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மைகளால் எழுந்துள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு இலங்கைக்கு தங்களது ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக வலியுறுத்தினர்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதமர், கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கிய தொடர்ச்சியான ஆதரவிற்காக தனது நன்றியைத் தெரிவித்ததுடன், எதிர்காலத்திலும் இருதரப்பிற்கும் இடையிலான பங்களிப்பைத் தொடர்ந்து பேண வேண்டியதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார். (அ)

## கொடூர படுகொலைகளை...

ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் சிறைச்சாலை வாகனத்துக்குக் கொண்டுசெல்லப்படும்போது தன் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என ஊடகவியலாளர்களைப் பார்த்துக் கூறியிருந்தமை பற்றி கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்,

இது தொடர்பில் அமைச்சர் ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதங்களைப் பயன்படுத்தி நிகழ்த்தப்பட்ட கொடூரமான படுகொலைகளின் பின்னணியில் பிள்ளையான் இருந்துள்ளார் என்பது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளில் வெளிவந்துள்ளது. இவ்வாறான கொடூரக் கொலைகளையும் குற்றச் செயல்களையும் புரிந்துவிட்டு, இன்று தான் முற்றிலும் குற்றமற்றவர் என்று அவர் கூறுவது மிகவும் வேடிக்கையானது.

அதிகார பலத்தைப் பயன்படுத்தி அவர் இத்தனை காலம் மறைத்து வைத்திருந்த அத்தனை இரகசியங்களும், பழிவாங்கல் குற்றங்களும் இப்போது நீதிமன்றத்தின் மூலம் ஒவ்வொன்றாக அம்பலமாகத் தொடங்கியுள்ளன. சட்டத்தின் முன்னால் யாரும் தப்பிக்க முடியாது. இத்தனை காலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில், பிள்ளையான் புரிந்த குற்றங்களுக்கான தக்க தண்டனையை நீதிமன்றம் மிக விரைவில் வழங்கும்- என்றார். (அ)

## ஹெய்ட்டிக்கு இலங்கை படைகள்...

விவகாரம் குறித்து ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அமைப்பின் உத்தியோகபூர்வ எக்ஸ் தளப் பதிவில், இலங்கைப் படையினரால் முன்னர் ஹெய்ட்டியில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் தொடர்பில் முழுமையான பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், ஹெய்ட்டிக்கு அனுப்பப்படவுள்ள படையினரைத் தெரிவு செய்வது தொடர்பான பரிசோதனைகளில் ஐக்கிய நாடுகள் சபையின் நேரடி பங்களிப்பு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

"மனித உரிமைகள் தொடர்பான சுயாதீன மதிப்பீடு மற்றும் தெளிவான பொறுப்புக்கூறல் கட்டமைப்பு இல்லாத நிலை தீவிர கவலைக்குரியது. ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனி பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அவற்றை நடைமுறைப்படுத்த யாரும் பொறுப்பேற்காத போது பொறுப்புக்கூறல் இல்லாமல் போகிறது" என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஹெய்ட்டி ஏற்கனவே ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து மீள முயற்சிக்கும் நிலையில், கடந்த கால தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளாமல் மீண்டும் அதே நிலை உருவாகக் கூடாது எனவும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் எச்சரித்துள்ளது.

அதனால், இலங்கைப் படையினரை அனுப்புவதற்கு முன்னரே நம்பகமான பின்னணி பரிசோதனைகள், மனித உரிமை கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் நடைமுறைகள் உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (அ)

## இலங்கையிலேயே மிக...

சுட்டிக்காட்டுகின்றோம், என மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடல், ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலின் போது, வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் களமட்டத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் அமைச்சருக்கு விரிவாக விளக்கமளித்தார். குறிப்பாக, சிறுவர் பராமரிப்புத் தொடர்பில் காணப்படும் சட்ட ஏற்பாடுகளின் போதாமைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

போதைப்பொருளுக்கு அடிமையான சிறுவர்களுக்கென பிரத்தியேகப் புனர்வாழ்வு மையம் வடக்கு மாகாணத்தில் இல்லாமையால், அவர்களைச் சான்றுபெற்ற பாடசாலைகளில் இணைக்கும் போது பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் எழுவதாக அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன், உளநலத் தேவைப்பாடுடைய சிறுவர்களைப் பராமரிப்பதற்கென அரச சிறுவர் இல்லங்கள் இன்மையால் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்தும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், கைவிடப்பட்ட சிறுவர்களை அரவணைத்து வளர்த்தெடுக்கும் இப்பணியானது வெறும் தொழில் அல்ல, அது ஒரு மாபெரும் சமூகச் சேவை என்ற உணர்வோடு முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

சட்டரீதியான திருத்தங்கள் தேவைப்படும் விடயங்கள் தொடர்பில், 9 மாகாணங்களும் ஒன்றிணைந்து ஆவண ரீதியாக முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறும், அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## நாட்டு மக்களை நாளுக்கு...

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புத்தளம் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அளவற்ற பொய்களைக் கூறி ஆட்சிக்கு வந்த ஒரு அரசாங்கம், பொய் சொல்லி ஆட்சிக்கு வந்தது மட்டுமின்றி, ஆட்சியில் நீடிப்பதற்கும் பொய்களையே புகலிடமாகக் கொள்ளும் அரசாங்கமாக மாறியுள்ளது. கடந்த நாள்களில் ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்துக்கு வந்ததை நாம் பார்த்தோம்.

ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வரும்போது, வாழ்க்கைச் செலவைக் குறைப்பது பற்றிப் பேசுவார் என்று நாம் எதிர்பார்த்தோம் விவசாயிகளின் உரப் பிரச்னை குறித்துப் பேசுவார் என்று எதிர்பார்த்தோம் நெல் விலை குறித்துப் பேசுவார் என்று எதிர்பார்த்தோம் தொழிற்சாலைகள் மூடப்படுவது பற்றியும், இந்த பொருளாதார நெருக்கடியை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்தான திட்டங்கள் பற்றியும் பேசுவார் என்று எதிர்பார்த்தோம்.

ஆனால் இல்லை! ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்திற்கு வந்து, பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் வேலையைச் செய்து கொண்டிருக்கிறார். அரசாங்கத்தால் வேலை செய்ய முடியாவிட்டால், அரசாங்கத்திற்கு வேலை செய்யத் தெரியாதபோது, அரசாங்கம் என்ன செய்கிறது? தன் இயலாமையை மறைக்க அடக்குமுறையைக் கையாள்கிறது.

"விசாரணைகளை நடத்த வேண்டாம்" என்று யாரும் கூறவில்லை. நடத்தத்தான் வேண்டும். தரக்குறைவான நிலக்கரியைக் கொண்டு வந்தவர்கள் யார், அந்த நிலக்கரி கப்பல் விவகாரம் என்ன என்பதைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். உலகிலேயே மிக அதிக விலை கொடுத்து எண்ணெய் வாங்கியது ஏன் என்பது குறித்து ஆராய வேண்டும் -என்றார். (அ)

## ரூ.20 விலை குறைப்பால்...

ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் விலை வெறும் 20 ரூபாயால் மட்டுமே குறைக்கப்பட்டுள்ளது. ஆனால், கடந்த காலங்களில் விலைகள் உயர்த்தப்பட்ட போது, தற்போதைய குறைப்பை விட 3 முதல் 4 மடங்கு அதிகமாக விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள், கையிருப்பில் உள்ளதால் உடனடியாக விலையைக் குறைக்க முடியாது என அரசாங்கத் தரப்பும் அமைச்சர்களும் சாக்குப் போக்கு கூறி வருகின்றனர்.

எனினும், சர்வதேச சந்தையில் குறைந்த விலைக்கு எரிபொருள் கிடைத்த காலத்தில், அதனை உள்நாட்டில் அதிக விலைக்கு விற்றது எப்படி என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த சொற்ப விலை குறைப்பானது சந்தையில் பொருட்களின் விலைகளையோ, போக்குவரத்து கட்டணங்களையோ அல்லது மின்சாரக் கட்டணங்களையோ எந்த வகையிலும் பாதிக்காது.

இதனால் சாதாரண மக்களுக்கு எவ்வித பலனும் கிடைக்கப் போவதில்லை-என்றார். (அ)

## இவ்வருடம் மாகாண...

மேலும் கூறுகையில்:-

அரசு தனது முடிவை எடுப்பதற்கு மேலதிகமாக மூன்று மாத கால அவகாசம் கோரியுள்ளது. இதனால் மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக இறுதித் தீர்மானமொன்றை எடுப்பதில் தொடர்ச்சியான தாமதங்கள் நீடித்து வருகின்றன. இதன் காரணமாக இந்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் எவையும் காணப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முதலாவது கூட்டத்திலேயே நான், மனோ கணேசன், சாணக்கியன் இராசமாணிக்கம் மற்றும் நிசாம் காரியப்பர் உள்ளிட்ட பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தோம். எனினும், அரசின் தொடர்ச்சியான தாமதங்கள் காரணமாக, ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட மூன்று மாத காலக்கெடுவைத் தாண்டியும் இந்தச் செயன்முறை நீண்டு செல்கின்றது -என்றார். (அ)

## கடற்படை தளபதியாக...

இதுவரை கடற்படையின் தலைமை அதிகாரியாக கடமையாற்றிய ரியர் அட்மிரல் டேமியன் பெர்னாண்டோ வைஸ் அட்மிரல் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டு, இலங்கை கடற்படையின் 27ஆவது கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் இன்று முதல் நடைமுறைக்கு வரவுள்ளதுடன், தற்போதைய கடற்படைத் தளபதி அத்மிரால் காஞ்சன பானகொட அன்றைய தினம் பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# சொத்து பிரகடனங்களுக்கு அரசு ஒரு வாரம் அவகாசம்

கொழும்பு, ஜூலை. 01

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறியவர்களுக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கியுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, ஜூலை 7ஆம் திகதி நள்ளிரவு வரை பிரகடனங்களை இணையவழியில் தாக்கல் செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகமானோர் ஒரே நேரத்தில் படிவங்களை சமர்ப்பிக்க முயன்றதால் ஏற்பட்ட இணையத்தள தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக இந்த நீடிப்பு வழங்கப்பட்டதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முன்னதாக, நேற்று இறுதி நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது. காலக்கெடுவுக்குள் சமர்ப்பிக்கத் தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பணிப்பாளர் நாயகம் ரங்கா திஸாநாயக்க எச்சரித்திருந்தார். (அ)

# மண்ணெண்ணெய் விலை குறையவில்லை; கடற்றொழிலாளர்களுக்கு பெரும் ஏமாற்றம்!

கொழும்பு, ஜூலை. 01

அரசாங்கத்தினால் அண்மையில் எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்ட போதிலும், மண்ணெண்ணெய் விலை குறைக்கப்படாமை மற்றும் தமக்கு வழங்கப்படவிருந்த மானியங்கள் இதுவரை கிடைக்கப்பெறாமை குறித்து கடற்றொழிலாளர்கள் கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் சில எரிபொருள் வகைகளின் விலையைக் குறைத்து திருத்தம் மேற்கொண்டுள்ளது.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கடற்றொழிலாளர்கள்,

பெற்றோல் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்ததாகக் கூறினாலும், எமது வாழ்வாதாரத்துக்குத் தேவையான மண்ணெண்ணெய் விலை குறைக்கப்படவில்லை. மண்ணெண்ணெய் விலை குறையாததால் எம்மால் தொழிலுக்குச் செல்ல முடியாமல் படகுகள் அனைத்தும் கரையிலேயே நிறுத்தப்பட்டுள்ளன - என்றனர்.

"கடற்றொழிலாளர்களுக்காக மில்லியன் கணக்கில் மண்ணெண்ணெய் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். அதற்கான விண்ணப்பப் படிவங்களையும் அதிகாரிகள் எங்களிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

ஆனால், இதுவரை அந்த மானியத் தொகை எங்களுக்குக் கிடைக்கவில்லை. அரசாங்கம் ஒதுக்கிய அந்தப் பணம் யாருடைய பைகளுக்கு சென்றது என்று தெரியவில்லை" என அவர்கள் குற்றம் சாட்டினர்.

யுத்தத்தைக் காரணம் காட்டி நாட்டில் ஏற்கனவே இருந்த எரிபொருள்களின் விலைகளை உயர்த்திய அதிகாரிகள், இப்போது மக்களுக்குரிய நிவாரணங்களை வழங்கத் தயங்குவதாக கடற்றொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இந்த மானியப் பணம் குறித்து ஜனாதிபதி உடனடியாக விசாரணை நடத்தி, தமக்குரிய நிவாரணங்களை விரைவாகப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# விவசாயிகளை பாதுகாக்கும் திட்டம் எதுவுமே இந்த அரசிடம் கிடையாது!

## சுட்டிக்காட்டுகிறார் ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, ஜூலை. 01

விவசாயிகளையும் விவசாயப் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்பாமல் நாட்டுக்கு நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


நாட்டின் பெரும்பாலான மக்கள் மற்றும் வர்த்தகர்கள் ஏதோ ஒரு வகையில் விவசாய விநியோகச் சங்கிலியுடன் இணைந்துள்ளனர்.

ஆனால், விவசாயிகளின் எதிர்காலத்தையோ அல்லது அவர்களின் பொருளாதாரத்தையோ பாதுகாப்பதற்கான எந்தவொரு திட்டமும் தற்போதைய ஆட்சியாளர்களிடம் இல்லை. இவர்களுக்கு விவசாயப் பொருளாதாரத்தின் அடிப்படை கூட புரியவில்லை.

கடந்த காலங்களில் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான நெல் விவசாயிகளை இணைத்து, கியூ.ஆர். குறியீட்டுடன் போட்டிச் சந்தையை எதிர்கொள்ளும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட "சக்தி" அரிசித் திட்டம் கோட்டாபய ராஜபக்ஷவினால் சீரழிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு முறையைப் பற்றிப் பேசும் மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகளால் கூட, அதன் மூலம் மக்களுக்கு எவ்வாறு சேவை செய்வது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

தம்புள்ளை பகுதியில் உள்ளூர் வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் மிளகாய் விவசாயிகளின் நன்மையைக் கருதி, 5,000 மெற்றிக் தொன் பொருள்களைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட களஞ்சியசாலை தற்போது முற்றிலும் பாழடைந்துள்ளது. தற்போது அங்கு உள்ளூர் விவசாயிகளின் பொருள்கள் எதுவும் இல்லை, மாறாக சீனா மற்றும் பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களே சேமிக்கப்படுகின்றன.



ஒருபுறம் நெல் விவசாயிகளும், மறுபுறம் உலர் வலய காய்கறி விவசாயிகளும் தங்களின் விளைச்சலைச் சேமித்து வைக்கவோ அல்லது நியாயமான விலையைப் பெறவோ முடியாமல் தவிக்கின்றனர். அரசாங்கத்துக்கு இந்த உண்மைகளைப் புரிந்துகொள்ள முடியாவிட்டால், இந்த ஆட்சியினால் நாட்டுக்கு எந்தவொரு பயனும் இல்லை -என்றார். (அ)

# நாடு முழுவதிலும் பலத்த காற்று; 15 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 01

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழை காரணமாக, நாட்டின் பல பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கை இன்று முற்பகல் 11.00 மணி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேல், சப்ரகமுவ, மத்திய, தென், வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த பகுதிகளில் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

15 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 07 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# ஓட்டோ கட்டணம் மாற்றம் இல்லை!

கொழும்பு, ஜூலை. 01

பெற்றோல் விலை குறைக்கப்பட்டபோதிலும், ஓட்டோ கட்டணங்களில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது எனத் தேசிய ஒருங்கிணைந்த ஓட்டோச் சாரதிகள் மற்றும் கைத்தொழில் முயற்சியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது ஒரு கிலோமீற்றருக்கு 16 ரூபாய் நட்டத்துடனேயே தமது தொழிலை முன்னெடுத்து வருவதாக அந்தச் சங்கத்தின் பிரதம செயலாளர் லலித் ரோஹண பெரேரா தெரிவித்துள்ளார்.

எனவே ஓட்டோ கட்டணத்தில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ள முடியாத என அவர் குறிப்பிட்டார். (அ)

# 20 கிலோ அரிசியைக் கூடக் கடனுக்கு வாங்கும் நிலையில் அரச ஊழியர்கள்!

## அரசாங்கம் மீது வீரவன்ஸ சாடல்

கொழும்பு, ஜூலை. 01

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக நாட்டின் அரச ஊழியர்கள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் அரச ஊழியர்களுக்குத் தவணை முறையில் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களை வாங்குவதற்கான வசதிகள் செய்து தரப்படும் என கனவுகள் காட்டப்பட்டன.

12 இலட்சத்திற்கு விட்ஸ் கார்களைக் கொள்வனவு செய்வது ஒருபுறமிருக்க, இன்று 20 கிலோ அரிசியைக் கூட தவணை முறையில் கடனுக்கு கொள்வனவு செய்து உண்ணும் அளவிற்கு அரச ஊழியர்களின் நிலைமை வீழ்ச்சியடைந்துள்ளது .

அஞ்சல் மூல வாக்களிப்பிற்காக நீண்ட வரிசையில் நின்று தற்போதைய ஆட்சியாளர்களுக்கு ஆதரவளித்த அச ஊழியர்களை, இன்று அமைச்சர்கள் பகிரங்கமாக "திருடர்கள்" என அவமதிக்கின்றனர்.

வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் அரச ஊழியர்களை இந்த அளவுக்கு அவமதித்ததில்லை.

நாட்டை முன்னேற்றுவதற்கோ அல்லது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கோ அரசாங்கத்திடம் எந்தவொரு திட்டமும் இல்லை.மாறாக, அரசியல் பழிவாங்கல்களும், ஒரு சில அதிகாரிகளின் கருத்துக்களைப் பேணுவதுமே இந்த அரசாங்கத்தின் இருப்பாக மாறியுள்ளது. விவசாயிகளை அவமதிப்பதும்,பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அரசியல் எதிரிகளை வேட்டையாடுவதுமே தற்போதைய ஆட்சியின் நாளாந்தச் செயல்பாடாக உள்ளது - என்றார். (அ)

# இலங்கையில் 7 நாள்கள் தங்கியிருந்த நாணய நிதியக் குழு நாடு திரும்பியது!

கொழும்பு, ஜூலை. 01

இலங்கையின் தற்போதைய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் நிதியியல் முன்னேற்றங்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாட்டுக்கு வருகை தந்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று இலங்கையிலிருந்து புறப்பட்டனர்.

இலங்கை அரசாங்கத்தின் விடுத்த அழைப்பின் பேரில், கடந்த ஜூன் 24ஆம் திகதி கொழும்பை வந்தடைந்த இந்த உயர்மட்ட அதிகாரிகள் குழு, 7 நாட்கள் இலங்கையில் தங்கியிருந்து பல்வேறு தரப்பினருடன் தொடர் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்தது.

ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட நாட்டின் முக்கிய பொருளாதாரக் கொள்கை வகுப்பாளர்களை இக்குழுவினர் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ், அரசாங்கம் எட்டியுள்ள வருமான இலக்குகள், புதிய வரி ஆளுமைக் கொள்கைகள் மற்றும் எதிர்கால நிதி நிலைத்தன்மை குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

தங்களது 7 நாள்கள் உத்தியோகபூர்வ கள விஜயத்தை நேற்றுடன் நிறைவு செய்துகொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு, இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்த தங்களது உத்தியோகபூர்வ அறிக்கையை விரைவில் வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org